# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.131/2025

**Deposition of Witness for Prosecution PW 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெகதீஷ்வரன் | Father's Name | : | பரமசிவம் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அலகு குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 23.09.2022 அன்று 18.30 மணிக்கு திருவாரூர் நகர காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மயிலாடுதுறை கிளை பேருந்து ஓட்டுனர் மாரியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று திருவாரூர் நகர காவல் நிலைய கு.எண் 348/2022, 3(1) of TNPPDL Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:00:31 +0530

செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.16**. அன்றைய தினமே 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன், திவாகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.17**. பின்னர் சம்பவ இடத்திலிருந்து மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 யை அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.1, சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.18**. 23.09.2022 அன்று சாட்சிகள் மாரியப்பன், மாதவன், வினோதன், பிரகாஷ், சச்சிதானந்தம், லெனின், பசுபதி, திருமறைநாதன், மணிகண்டன், திவாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட தலைமறைவான எதிரிகளை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி 26.09.2022 அன்று திருவாரூர் பழைய பேருந்து நிலையம் கணேஷ் ஹோட்டல் அருகே நின்றுகொண்டிருந்த எதிரிகள் முகமது ஷாகுல் ஹமீது, முகமது மஹ்சூம் மகதீர், ஹாஜா நவாஸ் ஆகியோர்களை அடையாளம் கண்டு குற்ற காரணம் கூறி கைது செய்து விசாரித்ததில் 1ம் எதிரி முகமது ஷாகுல் ஹமீது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இச்சம்பவத்தில் மேலும் கூத்தாநல்லூரைச் சேர்ந்த அகமதுல்லா அவரது நண்பர்களான யாமீன் மற்றும் 2 நபர்கள் சம்மந்தப்பட்டுள்ளார்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:00:38 +0530

என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப் பிரிவினை 3(1) of TNPPDL Act லிருந்து இதச பிரிவுகள் 147, 120(B) உ/இ 3(1) of TNPPDL Act ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.19**. 26.09.2022 அன்று 16.15 மணிக்கு சாட்சிகள் ஆனந்தன், கபீர்தாஸ் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி முஹமது ஷாகுல் ஹமீது என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் புதிய பேருந்து நிலையத்தில் அரசு பேருந்தை உடைத்த இடத்தை அடையாளம் காட்டி எனது டூவீலரை எடுத்து தங்கள் முன்பாக ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.20**. அதனடிப்படையில் 17.00 மணிக்கு திருவாரூர் பழைய பேருந்து நிலையம் கணேஷ் ஹோட்டல் அருகே 1ம் எதிரி முஹமது ஷாகுல் ஹமீது ஆஜர் செய்த TN 50 AJ 4917 Pulsar 150 இருசக்கர வாகனம் ஒன்று, Vivo Android செல்போன் ஒன்று ஆகியவற்றை சாட்சிகள் ஆனந்தன், கபீர்தாஸ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.21**. மேற்படி அயிட்டங்கள் முறையே **சா.பொ.3, சா.பொ.4**. சா.பொ.3 ன் புகைப்படங்கள் 2 எண்ணிக்கை **அ.சா.ஆ.22 வரிசை**. சா.பொ.4 ன் புகைப்படங்கள் 2 எண்ணிக்கை **அ.சா.ஆ.23 வரிசை**. சா.பொ.3 ன் CD **சா.பொ.5**. சா.பொ.3, சா.பொ.4

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:00:45 +0530

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.24**. 17.15 மணிக்கு மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் 3ம் எதிரி முஹமது மஹ்சூம் மகதீர் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் புதிய பேருந்து நிலையத்தில் அரசு பேருந்தை உடைத்த இடத்தை அடையாளம் காட்டி முஹமது ஷாகுல் ஹமீதின் டூவீலரை எடுத்து தங்கள் முன்பாக ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.25**. 17.00 மணிக்கு திருவாரூர் பழைய பேருந்து நிலையம் ஆவின் பாலகம் அருகே 5ம் எதிரி சபீர் முஹமத் யாமின் என்பவரை குற்ற காரணம் கூறி கைது செய்து 17.15 மணிக்கு சாட்சிகள் மாரிமுத்து, சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் 5ம் எதிரி சபீர் முஹமத் யாமின் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். என்னை அழைத்து சென்றால் புதிய பேருந்து நிலையத்தில் அரசு பேருந்தை உடைத்த இடத்தை அடையாளம் காட்டுவேன் என சொன்னார். பின்னர் 18.00 மணிக்கு 2ம் எதிரி அஹமத்துல்லா என்பவரை கூத்தாநல்லூர் அவரது வீட்டருகே குற்ற காரணம் கூறி கைது செய்து 18.15 மணிக்கு சாட்சிகள் ஆனந்தன், கபீர்தாஸ் ஆகியோர் முன்னிலையில் 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் புதிய பேருந்து நிலையத்தில் அரசு பேருந்தை உடைத்த இடத்தை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:00:54 +0530

அடையாளம் காட்டி எனது டூவீலரை எடுத்து தங்கள் முன்பாக ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.26**. பின்னர் 19.30 மணிக்கு கூத்தாநல்லூர் பண்டுதகுடி பாலம் அருகே 2 ம் எதிரி அஹமத்துல்லா என்பவரிடமிருந்து மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் TN 50 T 0146 Bajaj Discover இருசக்கர வாகனத்தை இஞ்சின் நம்பர், சேசிஷ் நம்பர் குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.27**. மேற்படி அயிட்டம் **சா.பொ.6**. சா.பொ.6 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.28**. 26.09.2022 அன்று இவ்வழக்கின் சட்டப் பிரிவினை இதச பிரிவு 3(1) TNPPDL Act லிருந்து இதச பிரிவுகள் 147, 120(B) உ/இ 3(1) TNPPDL Act ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.19 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 26.09.2022 அன்று சாட்சிகள் மாரியப்பன், ஆனந்தன், கபீர்தாஸ் ஆகியோரை விசாரித்தும் 29.09.2022 அன்று சாட்சிகள் சக்திவேல், மாரிமுத்து ஆகியோரை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 05.10.2022 அன்று அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளர் ஜெய்சங்கரை விசாரித்து சேத மதிப்பு சான்று பெற்றும் 12.04.2023 அன்று அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளர் ராமமூர்த்தியை விசாரித்து சேத மதிப்பு சான்று பெற்றும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 12.04.2023 அன்று எதிரிகள் மீது இதச

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:01:04 +0530

பிரிவுகள் 147, 120(B) மற்றும் 3(1) of TNPPDL Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி கபீர்தாஸ் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தில் எதிரிகளை பார்த்ததாக புகாரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. எதிரிகள் அனைவரும் ஓரிடத்தில் கூடி திட்டமிட்டு பேசியதாகவோ அதன் தொடர் செயலாக சம்பவம் நிகழ்ந்ததாகவோ எந்த ஆதாரமும் இவ்வழக்கில் முன்னிலைபடுத்தவில்லை என்றால் தவறு. Friends of India ஒரு இயக்கத்தின் அமைப்பில் இவர்கள் உறுப்பினர்கள் என்பதற்கோ அதில் அங்கம் வகிப்பவர்கள் என்பதற்போ எந்தவித ஆதாரமும் எனது விசாரணை அறிக்கையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. திருவாரூர் புதிய பேருந்து நிலையத்தில் நிறைய கடைகள் உண்டு எனவும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி எனவும் சொன்னால் சரி. எதிரிகளை அடையாளப்படுத்துவதற்காக அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்படவில்லை என்றால் சரி. எனது விசாரணையில் முகம் மறைக்கப்பட்ட ஹெல்மெட் அணிந்த 2 நபர்கள் வழக்கு சம்பவத்தில் சம்மந்தப்பட்டதாகத்தான் தெரியவந்தது என்றால் சரி. எதிரிகள் எவரையும் நேரில் பார்த்ததாக எவரும் சாட்சியம்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:01:18 +0530

அளிக்கவில்லை என்றால் சரி. சட்டம் ஒழுங்கை சரிபடுத்துவதற்காக அவ்வப்போது புள்ளி விபரத்திற்காக வழக்குகள் போட இந்த எதிரிகளை தவறாக இணைத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எதிரிகளுக்கும் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்றால் தவறு. எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் எவர் முன்னிலையிலும் கொடுக்கவில்லை எனவும் எதிரிகளால் எந்த தடய பொருளும் எடுத்துக் கொடுக்கப்படவில்லை எனவும் எதிரிகள் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் தவறு. அ.சா.1, அ.சா.2 அன்றைய தினம் பணியில் இருந்ததற்கான பணிப் பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:01:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.